
# பாலுறவு சம்பந்தமான உங்களது உரிமைகளும் கடமைகளும்



## இணங்கிக் கொள்வதற்கு

ஒருவரின் இணக்கப்பாடின்றி அவரையோ/அவளையோ பாலுறவு சார்ந்த நடவடிக்கைக்கு ஊக்கப்படுத்தாமலிருப்பது அல்லது தொடாமல் இருத்தல் அல்லது முத்தமிடாமல் இருப்பதற்குரிய கடமை உங்களுக்குள்ளது. இல்லை என்றால் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளும் கடமை உங்களுக்குள்ளது.

**அத்துடன் இணங்கிக் கொள்வதற்கும்**

- உங்கள் உறவில் எவ்வளவு தூரம் சென்றுள்ளீர்கள் என்பது முக்கியமற்றது.
- கடந்த காலங்களில் மற்ற நபர் ஆம் என்று சம்மதித்திருந்தாலும் முக்கியமற்றது.
- நீங்கள் இந்த உறவில் நீடிக்க விரும்புதலும் முக்கியமற்றது.
- மற்ற நபரின் ஆடை அலங்காரம் மனதிற்கு சலனத்தை ஏற்படுத்தினாலும் முக்கியமற்றது.

### நீங்கள் அறிந்துள்ளீர்களா?



இலங்கை சட்டத்தின் பிரகாரம் இயற்கை பாலுறவு புணர்தலுக்கான சம்மதத்தை பெண்ணினால் மாத்திரமே வழங்க முடியும். அப்படிப்பட்டவர்கள் மூளை/ மன ரீதியாக சாதாரண நிலையில் இருத்தல் வேண்டும்.16 வயதை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மது அல்லது ஏனைய மாத்திரைகளின் தாக்கங்களுக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.

தூண்டப்படாமல் இருப்பதுடன் கட்டாயப்படுத்தப்படாமல் இருப்பது அல்லது தடுத்து வைக்கும் பீதி காயப்படுத்தும் அல்லது கொலை செய்யப்படும பீதிகளுக்கு உட்படாமல் இருத்தல் வேண்டும்.

இலங்கை குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் ஓரினச் சேர்க்கை தண்டனைக்குரிய குற்றமாக காணப்பட்டாலும் சம்பந்தப்பட்ட சட்டம் அமுலாக்கப்படவில்லை. அதனால் ஐக்கிய நாடுகளின் பொது, அரசியல் சட்டம் சம்பந்தமான சர்வதேச சட்ட வரண் முறைக்கு இலங்கை தனது இணக்கப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

## கௌரவம்

உங்களுடைய பால் நிலை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் மதிக்கப்படுவதற்கும் உரிமை உங்களுக்குள்ளது. அத்துடன் பால் இயல்பு தெரிவிக்குரிய உரிமை உங்களுக்குள்ளது. நீங்கள் இயற்கை பாலியல்பு, ஒரே பாலினத்தவர் (ஆணும்-ஆணும், பெண்ணும் -பெண்ணும்) அலி, எல்லா பாலுடனான பாலியல்பு, பாலியல்பு அற்ற தன்மை, இயற்கை பால் நிலை, பாலியல்பு தெளிவற்ற தன்மை, பாலியல் பல்வகைத் தன்மை, எதிர் பால்நிலைத் தன்மை என்பன பொதுவாகவும் இருக்கலாம். அது உங்களுடைய வாழ்க்கையின் ஒரு பகுதி ஆகும். எனவே எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது ஆகவே எல்லோரையும் கௌரவமாக நடத்தும் பொறுப்பு உங்களுகு உரியது.

## பாதுகாப்பு

அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பாக வாழும் உரிமை உங்களுக்குள்ளது. தேவையற்ற கருத்தரிப்பிலிருந்து பாதுகாப்பாக வாழும் உரிமை உங்களுக்குள்ளது. பாலுறவு சார்ந்த நோய்களிலிருந்து விலகி பாதுகாப்பாக வாழும் உரிமை உங்களுக்குள்ளது.

### பாலுறவு சம்பந்தமான தீமைகள்

பாலுறவு சம்பந்தமான தீமைகளாக பின்வருவன கருதப்படுகின்றன: வன்முறைகள், பாலுறவு, பொருளாதார, உளவியல், மொழி சார்ந்த உடல் சார்ந்த, தகாத உபயோகங்களும் உள்ளடங்கும் அத்துடன் தனிப்பட்ட நபரின் பாலியல்பு, வயது, பாலியல்பு சார் வெளிப்பாடு, சிவில் நிலமை, பாலியல்பு சார் வரலாறு அல்லது நடத்தைகோலம், பாலுறவு தொடர்பான செயற்பாடு அல்லது அதை வெளிப்படுத்தும் விதம் என்பன தொடர்பான வன்முறைகள் இதனுள் அடங்கும்.

வன்முறையை பாவிக்காதிருத்தலுக்கும், வன்முறையை தூண்டாமலிருப்பதற்கான கடமை உங்களுக்குள்ளது.
உங்களுடைய பாலுறவு மற்றவர்களுக்கு வேண்டத்தகாத கருவை ஏற்படுத்ததாதிருப்பதற்கான கடமை உங்களுக்குள்ளது.
மற்றவர்கள் பாலுறவு சார்ந்த நோயினால் பீடிக்கப்படாமல் இருப்பதற்கான பொறுப்பு உங்களுக்குள்ளது.

### சுரண்டல்களிலிருந்து பாதுகாப்பு வழங்குதல்

சட்டத்தின் பிரகாரம், எல்லா குழந்தைகளுக்கும், விடலைப் பருவத்தினரும் கீழ்வரும் உரிமைகளுடன் கூடிய விசேட பாதுகாப்பை பெற உரித்துடையவராகின்றனர். பாலியல்பு ரீதியான சுரண்டல், சிறு பிள்ளைகளை பாலுறவு சார் தொழிலில் பயன்படுத்துதல், எல்லா வகையான பாலுறவு சார்ந்த தகாத செயற்பாடுகள், வன்முறைகள், தொந்தரவு அதாவது சிறுவர்களை கட்டாயத்தின் நிமித்தம் பாலுறவு சார்ந்த செயற்பாடுகளில் பயன்படுத்தல் அல்லது சிறுவர்களை பாலுறவு சார்ந்த படைப்புக்களில் பயன்படுத்துதல் என்பன இலங்கை சட்டத்தில் தண்டனைக்குரிய குற்றமாகும்.


**உசாத்துணைகள்**
உலக சுகாதார நிறுவனம் ( WHO) சர்வதேச திட்டமிட்ட பெற்றோர்களுக்கான அமையம். ( IPPF)
மினிசோட்டா பல்கலைக்கழக பால்நிலை தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்.



**பால்நிலை சார் கல்வி நிலையம்**
**களனிப் பல்கலைக்கழகம்**
**தொலைபேசி 011 2908939**
**மின்னஞ்சல் : cgsuk@kln.ac.lk**
**இணையம் : http://www.kln.ac.lk/units/cgs/**

CENTRE FOR GENDER STUDIES
UNIVERSITY OF KELANIYA



*படங்கள் பக்க வடிவமைப்பு : திலினி மீகஸ்வத்தை*
*மொழிபெயர்ப்பு த.அ புஸ்பராஜா*

# முன்னுரை

பாலியல்பு அத்துடன் பாலுறவு காரணமாக ஏற்படும் சந்தோஷம் என்பன மனித வாழ்வின் மையமாக விளங்குகின்றது. இது இனப் பெருக்கம் தொடர்பான ஒருவரின் தனிப்பட்ட தெரிவுகளுடன் சம்பந்தப்பட்டதும், அப்பாற்பட்டதுமாகும். எனவே பாலியல்பு என்பது இனப் பெருக்கம் தொடர்பான ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றும் ஊடகம் மட்டுமல்ல  மாறாக தனிப்பட்ட நபர்கள் தங்களுடைய பாலியல்பை அனுபவிக்கவும் மகிழ்ச்சியடையவும் உரித்துடையவர்கள் ஆகின்றனர். அத்துடன் இனப் பெருக்கம் தொடர்பாக சுதந்திரமிக்க முடிவெடுக்கும் உரிமையும் அவர்களுக்குண்டு. அத்துடன் இனப் பெருக்கத்தின் போதும் தங்களுடைய பகுதியை அனுபவிப்பதற்கும், சுதந்திரமாக தீர்மானங்களை எடுப்பதற்கும் சம அளவு உரிமையுடையவராகின்றனர்.

பாலுறவு தொடர்பான சுகாதாரம் வாழ்வு முழுவதற்கும் பொருத்தமானதாகும். பாலுறவு தொடர்பான வன்முறை, சிறுவயதில் ஏற்படும் தகாத பாலுறவு அனுபவத்துடன் மனித பாலுறவு சம்பந்தமான சமதன்மையற்ற, எதிர்மறையான விம்பங்கள், பாலுறவு சம்பந்தமான பகுத்தல் (உதாரணமாக பாலுறவு சம்பந்தமான சில படங்களில் காட்சிப்படுத்தல் என்பன குடும்ப, விடலைப்பருவ காதல் உறவுகளில் நிரந்தரமான சிதைவுகளை ஏற்படுத்தக் கூடியது.) மேற் கூறப்பட்ட காரணங்கள் மன அழுத்தம், சுகவீனம், உடல், உளவியல், பாலுறவு தொடர்பான வன்முறைகளில் ஈடுபடத் தூண்டுவதுடன் சில சமயங்களில் தற்கொலை முயற்சிக்கும், கொலை முயற்சிக்கும்  வழிவகுக்கும்.

ஒவ்வொரு நாடும் பாலியல் வன்புணர்வு, பாலியல், பால்நிலை சார்ந்த வன்முறைகள், பாலுறவு தொடர்பான தகாத செயல்கள் மற்றும் ஏற்றுக் கொள்ள முடியாத செயற்பாடுகளை எதிர் கொள்வதற்கு சட்டங்களை உருவாக்கியுள்ளது. சிறுவர்கள், வயது வந்தவர்களுக்கிடையே நடைபெறும் பாலுறவு தொடர்பான செயற்பாடுகள் சட்டத்திற்கு முறைகேடானதாகும். குற்றம் நிரூபிக்கப்பட்டால் தகுந்த தண்டனை வழங்கப்படும். பாலுறவு சம்பந்தமான செயற்பாடுகளில்  ஈடுபடுவதற்கு ஏற்புடைய வயதெல்லை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பாலுறவு தொடர்பான உரையாடல்களில் ஈடுபடுதல் மற்றும் பாலியல்பு தொடர்பான தகுந்த தரவுகளை பெற்றுக் கொள்வதற்குமான நிலமை கலாச்சாரப் பின்னணிகள், வெட்கம், பிறர் கருத்து என்பவற்றால் குறைப்படுத்தப்பட்டுள்ளது. பாலுறவு ரீதியான வன்முறைகளை எடுத்து நோக்கினால் பாதிப்புக்குள்ளான நபரும் காப்பாற்றப்பட்டவரும் அவப்பெயருக்குள்ளாவதுடன் குற்றம் புரிந்தவர் தப்பிக்கும் அவலநிலை காணப்படுகின்றது. பாலுறவு சம்பந்தமாக பிழையான தரவுகளும், போதிய அறிவற்ற தன்மையும் (பாலுறவு தொடர்பான உரிமைகள், கடமைகள்) என்பன சமதன்மையற்ற, சுகாதாரமற்ற வன்முறைமிக்க, பாலுறவுகளுக்கும், சட்டம் சார்ந்த பிரச்சனைகளுக்கும் வழிவகுக்கின்றது.

சாதகமானதும், கவனிக்கத்தக்க பாலுறவு சார்ந்த உறவு முறைமையைனது அன்புள்ள, சுகாதாரமான, இருபக்கமும் திருப்தியடைகின்ற பாலுறவிற்கு வழிவகுக்கும். இன்னும் அதிகமாக பொறுப்பு மிக்க தனிநபர்களாக இந்த சமுதாயத்தில் நாங்கள் செயற்பட வேண்டுமானால், பாலுறவு சார்ந்த அடிப்படை முறைமைகள், பாலுறவு சார்ந்த உரிமைகள், கடமைகள், என்பவற்றை புரிந்து கொள்ளுதல்  முக்கியமாகும்.

# பாலுறவுசார் உரிமைகள் என்ன?

- பாலுறவு சுகாதாரத்திற்கான உரிமை
- பாலுறவு, இனப்பெருக்கம் தொடர்பான சுகாதார சேவைகளை பெறுவதற்கான உரிமை
- பாலுறவு தொடர்பான கல்வியுரிமை, தகவல் பெறும் உரிமை
- பாலுறவு தொடர்பான தனிநபர் விருப்புரிமை
- பாலுறவு தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடாமல் இருப்பதற்கான உரிமை
- உடல் தொடர்பான மாண்பிக்கும், மதிப்பிக்குமான உரிமை
- பாலுறவு செயற்பாட்டிற்கான நபரை தெரிவு செய்யும் உரிமை
- ஒத்தமைவுள்ள  பாலுறவு தொடர்பான செயற்பாட்டிற்குரிய உரிமை
- ஒத்தமைவுள்ள திருமண வாழ்வுக்கான உரிமை
- பிள்ளைகளை பெறுதல்/ பெறாமல் இருத்தல் எப்போது பிள்ளையை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான உரிமை
- திருப்திகரமான, பாதுகாப்பான, அத்துடன் மகிழ்ச்சிகரமான பாலுறவுக்கான உரிமை

### பாலுறவு தொடர்பான உரிமை

பாலுறவு தொடர்பான உரிமைகள் பாலுறவு தொடர்பான மனித உரிமைகளாகும். இவை தேசிய, சர்வதேச சட்டங்கள் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. பாலுணர்வு தொடர்பான உரிமைகள் இலங்கை அரசியலமைப்பு மற்றும் இதர சட்டங்கள் மூலமும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

## பாலுறவு தொடர்பான உரிமைகள், கடமைகள் உணர்த்தப்படுவதற்கு … நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

### சரியான தகவல்கள்

பாலுறவு தொடர்பான சரியான தகவலைப் பெறுவதற்குரிய உரிமை உங்களுக்குள்ளது. இந்த தகவல்கள் கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது. சாதாரணமான பாலுறவு வளர்ச்சி, தீர்மானம் எடுத்தல், பால்நிலைத் தன்மை, கருத்தரித்தல் சம்பந்தமான விளைவுகள், தெளிவுகள், இனப்பெருக்கம், பாலியல் தொடர்பான நோய்கள் அத்துடன் பாதுகாப்பான பாலியல் உறவில் ஈடுபடுதல் என்பன உள்ளடங்கும்.

மேற்கூறப்பட்ட விடயங்களில் உங்களை தெளிவு படுத்திக் கொள்ளும் கடமை உங்களுடையது அத்துடன் இந்த விடயங்களை பயன்படுத்தி உங்கள் பாலுறவு சம்பந்தமான பொருத்தமானதும், பொறுப்பு மிக்கதுமான முடிவுகளை எடுப்பது சாலச் சிறந்தது

**அறிவின் முக்கியத்துவம்**


பாலுறவு ரீதியான செயற்பாட்டிற்கு ஒத்துழைக்கும் போது அவன்/அவள் எவ்வாறான செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் என்பதையும் அதன் பிரதிபலனாக ஏற்படும் விளைவுகளையும், முடிவு-களையும் அறிந்திருத்தல் வேண்டும்.

### அனுமதி கொடுத்தல் அல்லது மறுத்தல்

ஆம் அல்லது இல்லை என்று சொல்வதற்கான உரிமை உங்களுக்குள்ளது. எவ்வளவு தூரம் இவ் விடயத்தில் சென்றுள்ளீர்கள் என்பது முக்கியமற்றது. கடந்த காலத்தில் ஆம் என்று சொல்லியிருந்தாலும் அதுவும் முக்கியமற்றது. மற்றைய நபர் இந்த உறவை தொடர விரும்புவதும் முக்கியமற்றது. மற்றைய நபர் உங்களால் கவரப்படுகிறார் என்பதும் முக்கியமற்றது.

### அனுமதி வழங்கும் படி முறைகள்

பாலியல் சார்ந்த செயற்பாட்டிற்கு அனுமதி வழங்கும் செயற்பாடானது ஒரு இயக்கமுள்ள படிமுறையாகும். மாறாக இது மற்றவருக்கு முழுமையாக கையளிக்கும் செயற்பாடாகாது.




### உங்களுக்கு தெரியுமா?

- எவ்வகையான பாலுறவு ரீதியான செயற்பாட்டிற்கும் அனுமதி அவசியம்.
- குடும்ப வாழ்வில் உள்ளவர்களுக்கும், காதல் உறவில் உள்ளவர்களுக்கும் அனுமதி அவசியம்.
- முதல் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் பின்பு அனுமதி மறுக்கப்படலாம்.
- தகுந்த வயது வராத (ஆண்/ பெண்) இரு பாலாருடனும் அவர்களின் விருப்பின் பெயரிலோ அல்லது விருப்பம் அல்லாது பாலியல் ரீதியான செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது பெண்களுடன் அவர்களின் விருப்பம் இன்றி பாலுறவு ரீதியான செயற்பாட்டில் ஈடுபடுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். சட்டத்தின் கீழ் பாலியல் வன்புணர்வு எத்தனிப்பின் பேரில் தண்டனை வழங்க முடியும்.
- கவருதல், உணர்ச்சியைத் தூண்டும் செயற்பாடுகள், உடலுறுப்புக்களை பகிரங்கப்படுத்தல் என்பன அனுமதிக்கான அறிகுறிகளாகாது.
- உறவு நிலையில் பணம், அன்பளிப்புக்களை ஏற்றுக் கொள்ளுதல் பாலியல் செயற்பாட்டிற்கான அனுமதி அல்ல.
- பெற்றோர், பாதுகாவலர் மற்றும் உறவினர் வேறு நபருக்கான பாலுறவு செயற்பாட்டிற்கு அனுமதி வழங்க முடியாது.
- ஒருவருடைய உயிரை ஆபத்துக்குள்ளாக்குமாறு பயமுறுத்தி அனுமதி பெறுதல் செல்லுபடியற்றதாகும்.
- சைகை மொழிகள் உடல் அசைவுகள் மட்டும் பாலுறவிற்கான தகுந்த அனுமதியாக அமையமாட்டாது.